இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"மனித முகங்களையும் குரல்களையும் பாதுகாத்தல்" என்ற தலைப்பில் திருத்தந்தை வழங்கியுள்ள இந்தச் செய்தி, இன்றைய நவீனத் தொழில்நுட்ப உலகில் மனித மாண்பையும் இறைவனோடு நமக்குள்ள உறவையும் எவ்வாறு தற்காத்துக் கொள்வது என்பதை விளக்குகிறது.

## 'வாழ்வைச் சிதைக்கும் அனைத்திற்கும் எதிராகப் பேச வேண்டிய கடமை திருஅவைக்கு உண்டு'

புதன்கிழமை தோறும் நடைபெறும் பொது மறைக்கல்வி உரையின் போது, திருத்தந்தை 14-ஆம் லியோ, இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 'திருஅவை பற்றிய கொள்கை விளக்க ஏடான' லூமென் ஜென்சியம் (Lumen Gentium) குறித்துத் தனது சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டார். குறிப்பாக, திருஅவையின் 'இறுதிக்கால நோக்கு' (Eschatological dimension) பற்றிப் பேசிய அவர், வாழ்வைச் சீரழிக்கும் தீமைகளைத் துணிவுடன் கண்டிக்க வேண்டியது திருஅவையின் கடமை என்பதை வலியுறுத்தினார்.

### வாழ்வைச் சிதைப்பவற்றைத் துணிவுடன் எதிர்த்தல்

நம்பிக்கையின் பாதுகாவலராகத் திகழும் திருஅவைக்கு ஒரு முக்கியமான பணி இருப்பதாகத் திருத்தந்தை சுட்டிக்காட்டினார். மனித வாழ்வைச் சிதைக்கும் மற்றும் அதன் வளர்ச்சியைத் தடுக்கும் அனைத்தையும் தெளிவாக மறுத்துப் பேச வேண்டும். ஏழைகள், சுரண்டப்படுபவர்கள், வன்முறை மற்றும் போரினால் பாதிக்கப்பட்டவர்கள், உடல் மற்றும் மன ரீதியாகத் துன்புறுவோர் ஆகியோரின் பக்கம் திருஅவை உறுதியாக நிற்க வேண்டும்.

நாம் பெரும்பாலும் கண்ணுக்குத் தெரியும் விடயங்களிலும், திருஅவையின் அன்றாட நிர்வாக நடவடிக்கைகளிலும் மட்டுமே அதிகக் கவனம் செலுத்துகிறோம் என்று திருத்தந்தை வருத்தம் தெரிவித்தார். ஆனால், திருஅவையின் உண்மையான இலக்கு விண்ணகமே என்பதை அவர் நினைவூட்டினார்.

### தொடர்ச்சியான மனமாற்றம் மற்றும் சீர்திருத்தம்

திருஅவையின் நிறுவனங்கள் இறை அரசுக்குச் சேவை செய்தாலும், அவை இவ்வுலகின் அழிவுக்குரிய தன்மையைக் கொண்டிருக்கின்றன என்பதைத் திருத்தந்தை தாழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார். எனவே:

- எந்தவொரு திருஅவை நிறுவனத்தையும் 'முழுமையானது' (Absolute) என்று கருத முடியாது.
- கால மாற்றத்திற்கு ஏற்ப உறவுகளையும், கட்டமைப்புகளையும் புதுப்பித்துக் கொள்ளும் தொடர்ச்சியான மனமாற்றம் திருஅவைக்கு அவசியம்.

'லூமென் ஜென்சியம்' ஏட்டின்படி, திருஅவை என்பது 'மீட்பின் உலகளாவிய அருட்சாதனம்' ஆகும். அதாவது, கடவுள் உலகிற்கு வழங்க விரும்பும் அமைதி மற்றும் முழுமையான வாழ்வின் அடையாளமாகவும் கருவியாகவும் திருஅவை திகழ்கிறது. திருஅவை என்பது இறை அரசு அல்ல, மாறாக அதன் 'விதையும் தொடக்கமும்' ஆகும். இதன் முழுமை காலத்தின் முடிவில்தான் கிட்டும்.

தமிழாக்கம் ஹெரால்டு

## 60-வது உலக தகவல் தொடர்பு நாள் செய்தி (2026)



### திருத்தந்தை 14-ஆம் லியோவின் மடல் சுருக்கம்

"மனித முகங்களையும் குரல்களையும் பாதுகாத்தல்" என்ற தலைப்பில் திருத்தந்தை வழங்கியுள்ள இந்தச் செய்தி, இன்றைய நவீனத் தொழில்நுட்ப உலகில் மனித மாண்பையும் இறைவனோடு நமக்குள்ள உறவையும் எவ்வாறு தற்காத்துக் கொள்வது என்பதை விளக்குகிறது.

### 1. முகமும் குரலும்: இறைவனின் புனிதமான கொடை

நமது முகமும் குரலும் வெறும் உடற்கூறுகள் மட்டுமல்ல, அவை ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுள் வழங்கிய தனித்துவமான அடையாளங்கள். பழங்கால கிரேக்க மொழியில் 'முகம்' என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சொல், மற்றவர்களுடன் உறவு கொள்வதைக் குறிக்கிறது. கடவுள் நம்மைத் தனது சாயலில் படைத்தபோது, நாம் அவரோடும் பிறரோடும் உரையாட வேண்டும் என்றே விரும்பினார்.

இயேசு கிறிஸ்துவின் முகம் மற்றும் குரல் வழியாகவே கடவுள் நம்மிடம் பேசினார். எனவே, மனித முகங்களையும் குரல்களையும் பாதுகாப்பது என்பது, நம்மில் பதிந்துள்ள கடவுளின் அன்பைப் பாதுகாப்பதாகும். நாம் வெறும் எந்திரங்களால் உருவாக்கப்பட்டவர்கள் அல்ல; நாம் ஒவ்வொருவரும் இறைவனால் தனிப்பட்ட முறையில் அழைக்கப்பட்டுள்ளோம்.

### 2. செயற்கை நுண்ணறிவும் (கிமி) எழும் சவால்களும்

இன்றைய டிஜிட்டல் தொழில்நுட்பமும், செயற்கை நுண்ணறிவும் (AI) மனித உறவுகளின் அடித்தளத்தை அச்சுறுத்துகின்றன. இது வெறும் தொழில்நுட்ப சவால் மட்டுமல்ல, இது மனிதத் தன்மையையே மாற்றியமைக்கும் சவாலாகும்.

- **சிந்திக்கும் ஆற்றல் குறைதல்:** சமூக ஊடகங்களில் பயன்படுத்தப்படும் அல்காரிதம்கள் (Algorithms) மனிதர்களைச் சிந்திக்க விடாமல், உடனடி உணர்ச்சிகளுக்கு அடிமையாக்குகின்றன.
- **எந்திரங்களைச் சார்ந்திருத்தல்:** எதையும் கேள்வி கேட்காமல் எந்திரங்களின் அறிவுரைகளை "தெய்வ வாக்காக" ஏற்றுக்கொள்வது மனிதனின் படைப்பாற்றலை அழித்துவிடும்.
- **போலி எதார்த்தம்:** இன்று நாம் திரையில் காண்பது உண்மையான மனிதரா அல்லது எந்திரமா என்று கண்டுபிடிப்பது கடினமாகிவிட்டது. இது மனித உறவுகளில் ஏமாற்றத்தையும் போலித்தன்மையையும் உருவாக்குகிறது.

### 3. மனிதநேயத்தை வளர்க்கும் தொழில்நுட்பம்

எந்திரங்கள் என்ன செய்யும் என்று கேட்பதை விட, நம்மிடமுள்ள கருவிகளைக் கொண்டு மனிதநேயத்தை எவ்வாறு வளர்க்கப் போகிறோம் என்பதே இன்றைய முக்கிய கேள்வி. நமது அறிவையும் கற்பனைத் திறனையும் எந்திரங்களிடம் ஒப்படைப்பது என்பது கடவுள் நமக்குத் தந்த திறமைகளைப் புதைக்கும் செயலாகும்.

செயற்கை நுண்ணறிவு உருவாக்கும் ஒரு 'கண்ணாடி உலகம்' நம்மைப் போன்ற சிந்தனை உடையவர்களோடு மட்டுமே பழகத் தூண்டுகிறது. இதனால், நம்மிலிருந்து வேறுபட்டவர்களை நேரில் சந்தித்து அன்பு செலுத்தும் வாய்ப்பு பறிபோகிறது.

### 4. நாம் செய்ய வேண்டிய கடமைகள்

புதிய கண்டுபிடிப்புகளை நாம் எதிர்க்கத் தேவையில்லை, ஆனால் அவற்றைச் சரியான பாதையில் வழிநடத்த வேண்டும். இதற்கு மூன்று தூண்கள் மிக அவசியம்:

- **பொறுப்புடைமை (Responsibility):** தொழில்நுட்பத்தை உருவாக்குபவர்கள் லாபத்தை மட்டும் கருதாமல், பொதுநலத்தையும் எதிர்கால சந்ததியினரையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். நாடுகள் முறையான சட்டங்களை இயற்றுவதன் மூலம் தனிமனித மாண்பைப் பாதுகாக்க வேண்டும்.
- **ஒத்துழைப்பு (Collaboration):** தொழில்நுட்ப வல்லுநர்கள், சட்டமியற்றுவோர், ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் இணைந்து பொறுப்புள்ள டிஜிட்டல் சமுதாயத்தை உருவாக்க பாடுபட வேண்டும்.
- **ஊடகக் கல்வி (Media Education):** இது மிக அவசரமான தேவை. எது உண்மை, எது பொய் என்று பகுத்தறியும் திறனை இளைஞர்களுக்கும், விளிம்புநிலை மக்களுக்கும் கற்பிக்க வேண்டும்.

சுருக்கம் ஹெரால்டு

## சமூக பொருளாதார போராட்டங்களுக்கு மத்தியில் திருஅவை

2026-ஆம் ஆண்டின் உலகளாவிய பொருளாதாரச் சூழல் இப்போதும் கொந்தளிப்பாகவே உள்ளது. இதன் தாக்கம் மலேசியாவையும் எட்டியுள்ளது, குறிப்பாக அன்றாட வாழ்க்கைச் செலவுகள் தொடர்ந்து உயர்ந்து வருகின்றன. பெட்ரோல் மானியம் போன்ற அரசு உதவிகள் ஓரளவுக்குக் கைகொடுத்தாலும், சாதாரணக் குடும்பங்களின் நிலைமை மிகவும் சிக்கலாகவே உள்ளது. எரிபொருள் விலை என்பது ஒரு வெளிப்படையான அம்சம் மட்டுமே; ஆனால் அதன் ஆழமான தாக்கம் மளிகைப் பொருட்கள், போக்குவரத்து, பள்ளிக் கட்டணம் மற்றும் வாடகை ஆகியவற்றில் எதிரொலிக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் தங்கள் சமையலறை மேஜையில் அமர்ந்து அன்றாடச் செலவுகளைக் கணக்கிட்டுப் போராட வேண்டியுள்ளது.

இந்தச் சுமை இப்போது ஏழைகளைத் தாண்டி, நடுத்தர வர்க்கத்தினரையும் (M40) வாட்டத் தொடங்கியுள்ளது. வருமானம் மாறாமல் இருக்க, செலவுகள் மட்டும் உயர்ந்து கொண்டே போவதால், நிதியியல் ரீதியாகப் பாதுகாப்பாக இருந்த குடும்பங்கள் கூட இன்று தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளவும், எதிர்காலத்தைப் பற்றி அச்சப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அதே சமயம், புலம்பெயர் தொழிலாளர்கள், அகதிகள் மற்றும் புகலிடம் தேடுவோர் எந்தவித அரசுப் பாதுகாப்பும் இன்றி இன்னும் மோசமான பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். இவர்களுக்குப் போக்குவரத்து அல்லது உணவுச் செலவில் ஏற்படும் சிறிய உயர்வு கூட அவர்களின் அடிப்படை வாழ்வாதாரத்தையும் கண்ணியத்தையும் அச்சுறுத்துவதாக அமைகிறது.

### நெருக்கமான மேய்ப்புப்பணியின் அவசியம்

இத்தகைய யதார்த்தமான சூழலில், திருஅவை தூர நின்று வேடிக்கை பார்ப்பவராக இருக்க முடியாது. திருஅவையின் நம்பகத்தன்மை என்பது அதன் பெரிய கட்டிடங்களிலோ அல்லது அழகான வழிபாடுகளிலோ மட்டும் இல்லை; மாறாக, துன்பப்படுபவர்களுக்கு எவ்வளவு நெருக்கமாக அது நிற்கிறது என்பதில்தான் உள்ளது. நிதி நெருக்கடியில் இருக்கும் மக்களுக்குத் தீர்வுகள் மட்டும் போதாது — திருஅவை தங்களைக் காண்கிறது, தங்கள் குரலைக் கேட்கிறது, தங்களோடு பயணிக்கிறது என்ற உணர்வே அவர்களுக்குத் தேவை.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் (Gaudium et Spes) ஆவணம் கூறுவது போல, "இக்கால மனிதர்களின் மகிழ்ச்சியும் நம்பிக்கையும், துயரமும் கவலையும் திருஅவையினுடையதுமாகும்." மக்கள் கவலையில் இருந்தால், திருஅவை அலட்சியமாக இருக்க முடியாது.

### எளிமையும் ஒருமைப்பாடும்

திருஅவையின் நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதில் மிகுந்த கவனம் தேவை. அவசரமில்லாத பழுதுபார்ப்புகள் அல்லது புதிய கட்டுமானங்களைத் தள்ளிவைத்துவிட்டு, அந்தப் பணத்தை வறிய நிலையில் உள்ள குடும்பங்களுக்கும், அவசரக் கால உதவிக்காகவும் ஒதுக்க வேண்டும். திருஅவையின் சொத்துக்கள் என்பது நிறுவனத்திற்குச் சொந்தமானவை அல்ல, அவை மேய்ப்புப்பணிக்காக மக்களுக்காக இருப்பவை.

### ஒருமைப்பாட்டின் வலிமை

இந்த நெருக்கடியான காலம் நம்மை எளிமைக்கும், உண்மையான அன்பிற்கும் அழைத்துச் செல்கிறது. தொடக்கக் காலக் கிறிஸ்தவச் சமூகம் செல்வத்தால் வளரவில்லை, மாறாக தங்களுக்குள் எவரும் தேவையில் நலிவடையாதவாறு ஒருவரையொருவர் கவனித்துக் கொண்டதால் வளர்ந்தது.

உலகப் பொருளாதாரத்தை நம்மால் கட்டுப்படுத்த முடியாமல் போகலாம், ஆனால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நம்முடைய அன்பைக் காட்ட முடியும். திருஅவை நடைமுறைச் சட்டங்களைப் பேசிக் கொண்டிருக்காமல், மக்களுடன் கனிவோடு இருக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுடன் இணைந்து நிற்பதன் மூலம் திருஅவை ஒரு சக்திவாய்ந்த உண்மையை உரக்கச் சொல்கிறது: "நீங்கள் மறக்கப்படவில்லை; நீங்கள் தனிமையில் இல்லை; திருஅவை உங்களோடு இருக்கிறது."

இவ்வாறாக, நம் பங்குத்தளங்கள் வெறும் அலுவலகங்களாக இல்லாமல், மனிதத் துயரங்களைத் தன் இதயத்தில் தாங்கி நிற்கும் "அன்பின் புகலிடங்களாக" மாற வேண்டும்.

சேன்ட்ரா, ஹெரால்டு

# பாஸ்கா காலம் 7ஆம் ஞாயிறு (17.5.2026)

**திப1:12-14, 1பே4: 13-16, யோ 17:1-11**

## “உம்மை மகிமைப்படுத்தினேன்”

இன்று திருஅவை உயிர்ப்பு காலத்தின் ஏழாம் ஞாயிறைக் கொண்டாடுகிறது. முதல் வாசகத்தில் தாங்கள் ஈன்றெடுத்த பிள்ளைகளுக்காக ஆண்டவரிடம் செபிக்காத பெற்றோர்களே கிடையாது எனலாம். இறை நம்பிக்கை, நற்சுகம், நற்குணங்கள், நல்ல கல்வி, தகுந்த வேலை, பொருளாதரம், சமுதாயத்தில் நற்மதிப்பு, நல்ல வரன், இன்னும் என்னென்னவோ அனுதினமும் வேண்டிக்கொள்கிறோம். இது போலத்தான் நம் பெற்றோர்களும் நமக்காக வேண்டியிருப்பார்கள்.

இதைவிட மேலான உறவுதான் இயேசுவுக்கும் நமக்கும் இடையே நிலவுகிறது. இங்குதான் நாம் அடுத்தவருக்காக செபிக்க வேண்டும் என்கிற நற்குணத்தை கற்றுத் தருகிறார்.

எனவே இயேசு தமக்காக, தம் சீடர்களுக்காக, அவருடைய வார்த்தையை நம்பிக்கை கொள்பவர்களுக்காக மன்றாடுகிறார். இயேசுவின் பணி இச்செபத்தின்வழி வெளிப்படுவதை அறியமுடிகிறது. இதிலிருந்து நமது செப உதவி வேண்டி வருபவர்களை ஒரு போது மனம் நோகச் செய்யாது செபத்தில் இணைய முதன்மை கடமையாகிறது. இயேசுவும் தந்தையிடம் நமக்காக பரிந்து பேசும் செபத்தில், “உலகிற்காக அல்ல, மாறாக நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுக்காகவே வேண்டுகிறேன்” என வேண்டுகிறார்.

ஆம், இயேசுவின் வார்த்தை அன்பு நிறைந்தது, வாழ்வு நிறைந்தது, அருள் நிறைந்தது, நம்பிக்கைக் கொண்டது. ஆகையால்தான் பேதுரு இவ்வாறுச் சொன்னார். “அண்டவரே யாரிடம் செல்வோம் வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன” என்றும், மத்தேயு 7:21 இல் “என்னை நோக்கி, ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்பவனெல்லாம் விண்ணரசில் சேரமாட்டான். தந்தையின் விருப்பப்படி நடப்பவனே சேருவான்” என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நற்செய்தியில், இயேசு இறைவனை மகிமைப்படுத்துகிறார். தமது சொல்வழி, செயல்வழி, வாழ்வு வழி, அத்தோடு இறப்பின் வழியாகவும் தந்தையை மகிமைப்படுத்துகிறார். எனவேதான் தாம் இறுதி மூச்சி விடும்பொழுது “எல்லாம் நிறைவேறிற்று” என கூறமுடிந்தது.

இயேசு நமக்காக மன்றாடியதைச் சிலவற்றைக் காண்போம். லூக் 22:32 – பேதுருவை நோக்கி, “உன் விசுவாசம் தவறாதபடி உனக்காக மன்றாடினேன். யோவான் 17:9 – தம் சீடர்களுக்காக மன்றாடினார். யோவான் 17:15 – அவர்கள் ஒற்றுமையாக வாழ மன்றாடினார். எனவே, நமது செபங்களில் நம்மையே, நமது தேவைகளை சுற்றி அமைகின்றனவா? அல்லது மக்களின் தேவைகளை நோக்கி நம் மன்றாட்டுகள் இருக்கின்றனவா? எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் எனும் ஒருமைப்பாட்டில் நம் தேவைகளை நோக்கி செபிக்கின்றோமா?

அத்தோடு இன்று உலக சமூக தொடர்பு ஞாயிறைக் கொண்டாடுகிறோம். தொடர்பு சாதனத்தின் வழி, அதாவது தொலைக்காட்சி, பத்திரிக்கை, சஞ்சிகை, அலைபேசி, கடிதம், கணினி பல வகைகளில் உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் வினாடிக்குள் மற்றவரோடு தொடர்பு கொள்ள முடிகிறது.

அந்த வகையில் இறைவனை மகிமைப்படுத்த தொடர்பு சாதன கருவிகளை நன்முறையி பயன்படுத்துவோம். அன்று பேதுருவைப் போன்ற திருத்தூதர்கள் இந்த சாதனத்தின் வழி இன்னும் அதிகமாக இறை செய்தியைப் பரவ ஆவன செய்திருப்பார்கள். குறுஞ்செய்தி, இணையம் போன்ற வசதிகளைப் பயன்படுத்தி ஒருவருக்கொருவர் செய்திகளைப் பறிமாற்றம் செய்து உலக சமூக தொடர்பில் நமது செயலை மேம்படுத்துவோம். இறைத்தூதன் மற்றும் உறவாடும் குடும்பம் ஆகிய இதழ்களை வாசித்து பயன் அடைவோம்.

ஆ.வி.டேவிட்.

# தமிழ் அருங்கொடை மறுமலர்ச்சி எழுப்புதல் மாநாடு

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளைச் சார்ந்த சுமார் 248 பங்கேற்பாளர்கள், பிரிக்பீல்ட்ஸ் (Brickfields), பாத்திமா அன்னை தேவாலயத்தில் கடந்த மே முதலாம் நாளில் நடைபெற்ற தமிழ் அருங்கொடை மறுமலர்ச்சி எழுப்புதல் மாநாட்டில் கலந்துகொண்டனர். நிகழ்ச்சி துதி ஆராதனையுடன் தொடங்கியது. மகிழ்ச்சி நிறைந்த துதி ஆராதனைகள் தூய ஆவியின் பிரசன்னத்தை உணரவைத்தன.

முக்கிய நிகழ்வாக அருட்பணி பீட்டர் அந்தோணி அவர்கள் வழங்கிய இறைவார்த்தை பகிர்வில் நமது வாழ்வைத் தூய ஆவியானவர் வழிநடத்த நாம் அனுமதிக்க வேண்டும் என்றார். நமது சுய விருப்பத்தை இறைவனிடம் ஒப்படைத்து, அவரது தெய்வீகத் திட்டத்தைப் பின்பற்றும்போது மட்டுமே உண்மையான மாற்றமும் உள்ளத்தில் அமைதியும் ஏற்படும் என்று அவர் நம்பிக்கையாளர்களுக்கு நினைவுறுத்தினார்.

கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி ஏட்டின் (CCC 13) அடிப்படையில், கத்தோலிக்க விசுவாசத்தின் நான்கு முக்கியத் தூண்களைப் பற்றி தந்தை பீட்டர் விளக்கினார். நாம் எதை நம்புகிறோம்? விசுவாசம் என்பது நாமாக உருவாக்கியது அல்ல; அது நமக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கொடை. "நமக்குள் குடிகொள்ளும் தூய ஆவியால் ஒப்படைக்கப்பட்ட நல்ல போதனையைக் காத்துக் கொள்." (2 திமொத்தேயு 1:14) என்ற மறைநூலின்படி, அதை நாம் விசுவாசத்துடன் பாதுகாக்க வேண்டும். இறைவனின் அருள் நம்மை அடையும் விதம் குறித்து விளக்கினார். அருள் என்பது வெறும் அடையாளம் மட்டுமல்ல; கடவுள் அருளடையாளங்கள் வழியாக நமக்கு ஆன்மீக அருளை வழங்குகிறார்."



நாம் வாழும் விதம், விசுவாசம் என்பது வெறும் வார்த்தைகளில் மட்டும் இருக்கக்கூடாது; அது கீழ்ப்படிதலின் மூலம் வெளிப்பட வேண்டும் என்றும் விளக்கினார். கடவுளுடன் நாம் கொள்ளும் உறவு. செபத்தின் மூலம் அவரோடு ஒரு தனிப்பட்ட ஆழமான உறவில் நாம் வளர்கிறோம். இந்த நான்கு தூண்களும் கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமாகும். இதில் ஏதேனும் ஒரு தூணை அகற்றினாலும் நம் விசுவாசம் பலவீனமடையும். ஆனால், இவை நான்கும் இணைந்து ஒரு முழுமையான மற்றும் உயிருள்ள விசுவாசத்தைத் தாங்கி நிற்கின்றன.



மாநாட்டில் நற்கருணை ஆராதனை மற்றும் குணமளிக்கும் செபங்கள் இடம்பெற்றன. இதில் பலர் இறைவனின் பிரசன்னத்தை மிகவும் ஆழமான முறையில் உணர்ந்து அனுபவித்தனர். தந்தை, மகன் மற்றும் தூய ஆவியாகிய மூவொரு கடவுள் (மத்தேயு 3:16–17) குறித்தும், நமது ஆன்மீகப் பயணத்தில் நம்மை வழிநடத்தி வலுப்படுத்தும் தூய ஆவியின் ஏழு கொடைகள் (1 கொரிந்தியர் 12:1–11) குறித்தும் தியானிக்கப்பட்டது:

இத்தகைய அர்த்தமுள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த எமது பங்குத்தந்தை அருட்பணி ஆண்ட்ரூ மாணிக்கம் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழாக்கம் ஹெரால்டு

# மறைபோதகம், கிறிஸ்துவின் எதிரொலி



கோலாலம்பூர் மறைமாவட்ட மறைக்கல்வி ஆணைய ஏற்பாட்டில் ஓராண்டு மறைக்கல்வி சான்றிதழ் உருவாக்க பயிற்சி (Certificate in Catechetist), பிப்ரவரி 2026 தொடங்கி நவம்பர் 2026 வரை ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட சனிக்கிழமைகளில், கோலாலம்பூர் புனித அந்தோணியார் தேவாலயத்தில் உள்ள 'Cahaya Suara' என்ற இடத்தில் நடைபெற்று வருகிறது. கடந்த ஏப்ரல் 11-ஆம் நாள் “மறைபோதகத்தின் அடையாளம்” என்ற தலைப்பிலான பயிற்சியில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. முனைவர் ஸ்டீவன் செல்வராஜு அவர்களால் நடத்தப்பட்ட இந்த அமர்வில், மறைபோதக போதனை மற்றும் திருஅவையில் அதன் பணி குறித்த தங்கள் புரிதலை ஆழப்படுத்திக்கொள்ள ஆர்வமாக இருந்த 22 பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் உருவாக்க பயிற்சி, மறைபோதகத்தின் தன்மை, நோக்கம் மற்றும் பணிகள் குறித்த தெளிவான மற்றும் செழுமையான ஒரு பார்வையை வழங்கியது. இதில் முன்னிலைப்படுத்தப்பட்ட முக்கிய அம்சங்களில் ஒன்று, மறைபோதகம் என்பது வெறும் கோட்பாடுகளைக் கற்பிப்பது மட்டுமல்ல, மாறாக, கிறிஸ்துவின் வழியாகப் பெற்றுக்கொண்டவற்றை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதும், இறைவனின் வார்த்தையை உண்மையுடன் "பிரதிபலிப்பதும்" ஆகும். மறைபோதகர்கள் தனிப்பட்ட கருத்துக்களைப் பகிர்வதில்லை, மாறாகத் திருஅவையின் உண்மையான போதனைகளைப் பரப்புவதற்கு அழைக்கப்படுகிறார்கள் என்பதை எனக்கு நினைவூட்டியது.

அந்த அமர்வின் மையக் கருப்பொருள், மறைபோதகத்தின் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட தன்மையாகும். உண்மையான மறைபோதகம், அதன் இதயத்தில் இருக்கும் இயேசு கிறிஸ்துவிடம் மக்களை வழிநடத்துகிறது. அது அறிவைப் பற்றியது மட்டுமல்ல, அவருடன் ஒரு உறவைக் கட்டியெழுப்புவதைப் பற்றியதாகும். மேலும் சந்திப்பிலிருந்து, ஐக்கியத்திற்கும், இறுதியில் கிறிஸ்துவுடனான ஆழ்ந்த நெருக்கத்திற்கும் நகர்வதாகும். இது, இயேசுவுடனான எனது சொந்த உறவைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க எனக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்தது; ஏனெனில், நான் முதலில் அவரோடு நெருக்கமாக இருந்தாலன்றி, மற்றவர்களை என்னால் அவரிடம் வழிநடத்த முடியாது.

நம்பிக்கை அறிவை மேம்படுத்துதல், திருவழிபாட்டுப் போதனை, ஒழுக்க உருவாக்கம், செபிக்கக் கற்பித்தல், சமூக வாழ்வை வளர்த்தல், மற்றும் மறைப்பணி மனப்பான்மையை ஊக்குவித்தல் உள்ளிட்ட மறைப்போதகத்தின் முக்கியப் பணிகளையும் இந்தப் பயிற்சி வலியுறுத்தியது.

மறைபோதகத்தில் சமநிலையின் முக்கியத்துவம் மற்றொரு அர்த்தமுள்ள படிப்பினையாகும். திருஅவையானது திருமறை, மரபு, திருஅவையின் போதனைகள், திருவழிபாடு, புனிதர்களின் வாழ்க்கை, இறையியல், அழகு மற்றும் கலாச்சாரம் போன்ற பல்வேறு மூலங்களிலிருந்து அறிவைப் பெறுகிறது. நம்பிக்கையை பல வழிகளில் போதிக்க முடியும் என்பதையும், அது மனித வாழ்வின் வெவ்வேறு அம்சங்களைத் தொட வேண்டும் என்பதையும் Dr. ஸ்டீவன் மிக தெளிவாக எடுத்துரைத்தார்.

சுருங்க கூறின், இந்தப் பயிற்சி ஒரு மறைபோதகராக எனது பங்கைப் பற்றிய புரிதலை வலுப்படுத்தியுள்ளது. இது விசுவாசத்தில் தனிப்பட்ட முறையில் வளரவும், கிறிஸ்துவின் உண்மையுள்ள சாட்சியாக மாறவும் அழைக்கிறது. எனது போதனை எப்போதும் மற்றவர்களை இயேசுவிடம் நெருக்கமாக வழிநடத்துவதை உறுதிசெய்து, அதிக அர்ப்பணிப்புடன் தொடர்ந்து பணியாற்ற நான் தூண்டப்பட்டுள்ளேன்.

ஜெனிபர் கந்தசாமி, லூர்து மாதா ஆலயம் கிள்ளான்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.